Tamil

# Coronavirus (COVID-19)

# ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பி வருபவர்களுடைய நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கான தகவல்கள்

## 'COVID-19 (கொரோனா வைரஸ்)' நோய்த்தடுப்புத் சுய-தனிமை

### வெளிநாடுகளிலிருந்து ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பிவரும் குடும்பத்தினரும் நண்பர்களும் முதல் 14 நாட்களுக்கு ஹோட்டல் ஒன்றில் தங்கியிருக்குமாறு வேண்டப்படுவர்

நமது முழு சமூகத்தினரது பாதுகாப்பினை முன்னிட்டு, வெளிநாடுகளிலிருந்து ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பிவரும் உங்களுடைய குடும்பத்தினரும் நண்பர்களும் முதல் 14 நாட்களுக்கு நோய்த்தடுப்புத் தனிமையில் இருக்குமாறு வேண்டப்படுவர். பெரும்பான்மையானோருக்கு, இது நி.ச.வே மாநில அரசினால் ஏற்பாடு செய்யப்படும் ஒரு ஹோட்டலாக இருக்கும்.

வெளிநாடுகளில் இருந்துத் திரும்பிவரும் அனைவருக்கும், அவர்கள் சுகமாக இருப்பதுபோல் இருந்தாலும் கூட, இது பொருந்தும். 'COVID-19' நோய்த்தொற்று உள்ள ஒருவரை அவர்கள் எதிர்கொண்டிருக்கக்கூடும் என்பதால் இப்படிச் செய்யப்படுகிறது. அவர்கள் திரும்பி வந்ததிலிருந்து 14 நாட்களுக்குள் அவர்களுக்கு நோயறிகுறிகள் ஏற்படவில்லையெனில், அவர்களுக்கு நோய்த்தொற்று ஏற்பட்டிருப்பதற்கான சாத்தியக்கூறு மிகவும் குறைவு.

சமூகத்தில் 'COVID-19' நோய்த்தொற்றுப் பரவலைக் குறைப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது, மற்றும் இதற்கு இணங்காதவர்களுக்குக் கடும் அபராதங்கள் செல்லுபடியாகும்.

உங்களுடைய அன்பிற்கு உரியவர்களைப் பயிற்சி பெற்ற ஊழியர்கள் கவனித்துக்கொள்வார்கள், மற்றும் இவர்கள் இந்த 14 நாள் காலத்தைக் கூடிய வரைக்கும் சௌகரியமானதாக இருக்குமாறு பார்த்துக்கொள்வார்கள். உங்களுடைய அன்பிற்குரியவர்கள் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளப்படுவார்கள், மற்றும் அவர்களுக்கு உணவும் மருத்துவ கவனிப்பும் அளிக்கப்படும்.

### ஹோட்டலில் தங்கத் தேவையில்லை என்ற விதி விலக்கைப் பெறுபவர்கள், வீட்டில் 14 நாட்களுக்குத் தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும்

வெளிநாடுகளிலிருந்து திரும்பிவரும் உங்களுடைய குடும்பத்தினரும் நண்பர்களும் மருத்துவக் காரணங்களுக்காகவோ, கருணை அடிப்படையிலோ ஹோட்டலில் தங்கத் தேவையில்லை என்ற விதிவிலக்கைப் பெறக்கூடும். இதுபோன்ற வேண்டுகோள்களில் ஒவ்வொருவரும் தனித் தனியாகக் கருத்தில் கொள்ளப்படுவர்.

ஹோட்டலில் தங்கத் தேவையில்லை என்ற விதி விலக்கைப் பெறுபவர்கள், வீட்டில் 14 நாட்களுக்குத் தம்மைக் கட்டாயமாகத் தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இது தனிமையில் இருக்குமாறு வேண்டப்படும் ஒவ்வொருவருவருக்கும், அவர்கள் சுகமாக இருப்பது போல் இருந்தாலும் கூட, பொருந்தும். அவர்கள் கட்டாயமாக வீட்டில் இருந்தாக வேண்டும்.

உங்களுடைய குடும்பத்தினரும் நண்பர்களும் சுய தனிமையில் இருக்கும்போது நீங்கள் அவர்களைப் பார்க்கச் செல்லக்கூடாது.

இருப்பினும், உடல்ரீதியான தொடர்பு ஏற்படாத மற்ற வழிகளில் நீங்கள் அவர்களுக்கு ஆதரவுதவி செய்யலாம் (உதாரணமாக, சாப்பாடுகளைக் கொண்டு சேர்த்தல், தொலைபேசி மூலமாகப் பேசுதல் அல்லது இணைய வழியில் தொடர்புகொள்ளல்).

NSW GOVERNMENT

# ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பி வருபவர்களுடைய நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கான தகவல்கள்

## நோய்க்காப்புத் தனிமை அல்லது சுய-தனிமையில் இருந்த இந்த 14 நாள் காலத்திற்குப் பிறகு, உங்களுடைய குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள்

இந்த 14 நாட்கள் தனிமைக்குப் பிறகு, உங்களுடைய அன்பிற்குரியவர்களை நீங்கள் பார்க்கலாம், ஆனால், தற்சமயம் நடப்பிலுள்ள உடல்ரீதி விலகல் மற்றும் வருனர்களுக்கான எண்ணிக்கைக் கட்டுப்பாடு ஆகியவற்றைப் பற்றிய நி.ச.வே மாநில விதிமுறைகளை நீங்கள் கட்டாமாகப் பின்பற்றியாக வேண்டும்.

குறிப்பாக, உங்களுடைய குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் சிறிது காலமாக உங்கள் அருகே இல்லாமல் இருந்திருக்கும்போது - அவர்களுடன் உடல்ரீதியானத் தொடர்புகொள்ளாமல் இருப்பது உங்களுக்குப் புதிதாக இருக்கலாம்.

இருப்பினும், 'COVID-19'-இல் இருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ள நீங்கள் கட்டாயமாக:

- 1.5 மீட்டர் இடைவெளியுள்ள உடல்ரீதி விலகலைப் பின்பற்றவேண்டும்
- மற்றவர்களை அணைத்தல், முத்தமிடல் அல்லது அவர்களுடன் கை குலுக்குதல் கூடாது
- சோப்புப் போட்டு உங்கள் கைகளைக் குறைந்தபட்சம் 20 வினாடி நேரத்திற்கு அடிக்கடிக் கழுவ வேண்டும்
- உங்கள் கைகளைக் கழுவ இயலவில்லையெனில், கைச் சுத்திகரிப்பான் ஒன்றைப் பயன்படுத்துங்கள்
- உங்களுடைய வாய், கண்கள் அல்லது நாசியைத் தொடாதீர்கள்.

நோயறிகுறிகள் உங்களுக்கிருந்தால், 'COVID-19' நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளுங்கள்.

உங்களுக்கு சுகவீனமாக இருப்பதைப் போல இருந்தால், மற்றவர்களைப் பார்க்கச் செல்லாதீர்கள்.

சுவாச நோய் (இருமல், தொண்டை நோவு/அரிப்பு, நாசிக் கசிவு அல்லது மூச்சு வாங்கல் போன்ற) அறிகுறிகள் உள்ள எவரொருவரும், 'கொரோனா வைரஸ்' நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளவேண்டும்.

உங்களுடைய ஜி.பி-யை அழையுங்கள் அல்லது ஒரு பொது 'COVID-19' கிளினிக்-இற்குச் செல்லுங்கள்: https://www.nsw.gov.au/covid-19/how-to-protect-yourself-and-others/clinics

'நியூ சவுத் வேல்ஸ் மாநில சுகாதார'க் கிளினிக்-குகளில் 'மெடிகெயர்' சலுகைக்குத் தேவை இல்லை.

## மேலதிகத் தகவல்களுக்கு 'தேசிய கொரோனா வைரஸ் தகவல் இணைப்'பினை 1800 020 080 எனும் இலக்கத்தில் அழையுங்கள்

இலவச மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரைப் பெற **131 450** எனும் இலக்கத்தில் 'TIS நேஷனல்'-ஐ அழைத்து நீங்கள் வேண்டும் மொழி எது என்பதைச் சொல்லுங்கள்.

'கொரோனா வைரஸ் சுகாதாரத் தகவல் இணைப்'புடன் தொடர்புபடுத்துமாறு மொழிபெயர்த்துரைப்பாளரிடம் கேளுங்கள்.


© NSW Health May 2020.